Regestered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (27-9-65) இதழ் 227

விசுவாவசு புரட்டாதி || ஐ: ஆகிர் பிறை | திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு



போன் 565
PHONE 585
K.N.M.
மீரன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## இந்திய அணுகுண்டு!

கராச்சி, செப். 26

இந்தியா அணுகுண்டு தயாரித்துவருவதாகவும் அடுத்த 18 மாதங்களுக்குள் இந்தியா தனது முதலாவது அணுகுண்டுப் பரிசோதனையை நடத்துமென்றும் கொலம்பியாவில் தகவல் வெளியாகியிருப்பதாக ஆதாரம் காட்டி பாகிஸ்தான் வானொலி இன்று தனது செய்தியில் தெரிவித்தது. பம்பாய் அணு

(6-ம் பக்கம் பார்க்க)

# பாக்-இந்திய எல்லையில் மீண்டும் மோதல்?

## "விளைவுகளுக்கு பாக். பொறுப்பேற்க நேரிடும்"

— இந்தியா

லண்டன், செப். 26

இந்திய—பாகிஸ்தான் எல்லைகளில் மேலும் சில யுத்த அரங்குகளில் போர் நிறுத்தவிதி மீறப்பட்டுள்ளதாகவும் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

போர்நிறுத்த விதிகளை ஊடுருவல் மூலம் வேறு எந்த முறையிலும் பாகிஸ்தான் மீறுமேயானால் அதன் விளைவுகளுக்குப் பாகிஸ்தானே முழுப் பொறுப்பையும் ஏற்க நேரிடுமென்று இந்தியா, ஐ. நா. தலைமைக் காரியதரிசியிடம் தெரிவித்துள்ளது.

இதே சமயம் கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் திரிபுராப் பகுதியில் இந்திய பொலிஸ் நிலையம் ஒன்றின் மீதும் இந்திய எல்லைக்காவல் பொலிஸ்படையினர் மீதும் கிழக்குப் பாகிஸ்தான் துப்பாக்கிப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்திருப்பதாக இந்திய பாதுகாப்பு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### சீன எல்லையில் நிலைமை

இரண்டு தினங்களுக்குமுன் சிக்கிம்—திபெத் எல்லையில் முன்னேக்கிவந்திருந்த சீனத்துருப்புக்கள் வாபஸாகிவிட்டதாக நங்டொக்கிலிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன. ஆனல் நாத்துலாபகுதியில் உறைபனி வீழ்ந்துகொண்டிருந்தபோதிலும் சீனத்துருப்புக்கள் படைநிலைக்குழிகள் அமைத்துவருவதாகச்செய்திகள் கூறுகின்றன.

## கீரிமலைத் தீர்த்தத்தில் சிவமணியின் அஸ்திகரைந்தது

### ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலிசெலுத்தினர்

யாழ்ப்பாணம், திங்கள்

சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதனின் அஸ்தியில் ஒருபகுதி நேற்று நண்பகல் 12 மணிக்கு கீரிமலை தீர்த்தத்தில் கரைக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்திஞர்கள்.

திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபை யாழ்ப்பாணம் கிளைத்தலைவர் திரு. வி.கே. சின்னையா அஸ்தி வைக்கப்பட்டிருந்த கலசத்தைத் தோளில் தூக்கிச் செல்ல, அவர் அருகில் திரு. எஸ். அம்பிகைபாகன், திரு. ரி ஜெயரத்தினம் ஆகியோர் சென்று அஸ்தியைக் கரைத்தனர்.

அஸ்தி கரைப்பு வைபவத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் மற்றும் சைவப் பிரமுகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பெருந்திரளாகக்கலந்து கொண்டனர்.

அலங்கரிக்கப்பட்டமோட்டார் வாகனத்தில் ஊர்வலமாக அஸ்தி நேற்றுக்காலை 11 மணிக்கு கீரிமலையை வந்தடைந்தது.

அங்குள்ள ஒரு பந்தலில் அஸ்தி வைக்கப்பட்டு சுமார் ஒரு மணித்தியாலம்வரை பக்திப்பாடல்கள் பாடப்பட்டது. அஸ்தி கரைக்கப்பட்டபின் அதே பந்தலில் கல்வெட்டு பாடப்பட்டு விசேஷபூசையுடன் அன்னதானமும் வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை யாழ்ப்பாண நகரமண்டபத்திலிருந்து புறப்பட்ட அஸ்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்தபோது மாணவர்களும் ஆசிரியர்களும் அஞ்சலி செலுத்திஞர்கள். கோண்டாவில் கிராமசபை, இணுவில் கிராமசபை, இராமநாதன் கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள் அஸ்திக்கு வழியில் அஞ்சலி செலுத்திஞர்கள்.

சுன்னுகம் சந்தையில், பட்டினசபைதலைவர் திரு. பி. நாகலிங்கம் அஸ்திக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக இரு கூடை நிறைய இருந்த சிவப்பு மலர்களை சொரிந்தார். பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்திஞர்கள். மல்லாகத்திலும், மாவிட்டபுரத்திலும் மக்கள் அஞ்சலி செலுத்திஞர்கள்.

மகாஜனுக்கல்லூரி மாணவர்களும், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களும், பரமேஸ்வராக்கல்லூரி மாணவர்களும் அஸ்தி ஊர்வலத்தில் கலந்துகொண்டு பிரார்த்தனைப் பாடல்கள் பாடிஞர்கள்.

## யாழ் - கலாக்ஷேத்திர இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்.

"யாழ் கலாக்ஷேத்திரத்தின் ஐந்தாவது நிறைவுவிழாவின் மூன்ருவதுநாள் நிகழ்ச்சிகள் இன்று வண்ணை பிள்ளையார் கோவில்கலாக்ஷேத்திர நடன அரங்கில் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு கணேஸ் குழுவினர் மங்கள இசை, 7-00 மணிக்கு சரஸ்வதி பூசை; 8-15 மணிக்கு திருமதி கமலா பெரியதம்பி பாட்டு; 9-15 மணிக்கு கலாக்ஷேத்திர மாணவர்கள் நடனம்; 10-45 மணிக்கு தெட்சணமூர்த்தி குழுவினர் நாதஸ்வரம் 12-45 மணிக்கு தாளவாத்தியக் கச்சேரி சங்கீதபூஷணம் ஏ. எஸ். இராமநாதன்; 1-15 மணிக்கு வில்லுப்பாட்டு திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் குழுவினர்.

விழாவில் திருவாளர்கள் சி. உ. சோமசேகரம், சி. செல்வநாயகம், எஸ். சி. மாகதேவா, பரம் தில்லைராஜா, வி. ஆனந்தன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். அரசாங்க அதிபர் திரு. நெ. ஜெயவீர விழாவிற்குத்தலைமைதாங்குவார்.

### கதாப்பிரசங்கம்

இன்று மாலை 2-30 மணி முதல் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஸ்ரீமத் சி. எஸ். எஸ். மணிபாகவதர் "கம்பனும் கலைவாணியும்" எனும் பொருள் பற்றி கதாகாலக்ஷேபம் நடாத்துவார்.

மாலை 5 மணி முதல் 6 மணி வரை வண்ணை சிவன் கோவில் நவராத்திரிவிழாவில் மகாபாரதத் தொடரில் மணிபாகவதர் 'கசகவதம்' பற்றிக் கதாப்பிரசங்கம் செய்வார். 7 மணிக்கு விசேஷ பூசை இடம்பெறும்.

## சாஸ்திரியின் உறுதிக்கு ராஜாஜி பாராட்டு

சென்னை, செப். 26

இந்திய - பாகிஸ்தான் சண்டையில் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி காட்டிய உறுதியை சுதந்திரா கட்சித் தலைவரும் இந்தியாவின் முன்னுள் கவர்னர்ஜெனரலுமான திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார் பாராட்டினர்.

சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய ராஜாஜி இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டையை நிறுத்திக்கொண்டது சீனவுக்குப் பெரும் ஏமாற்றமாகும் என்றுர்.

சீன அபாயத்தை இந்திய உபகண்டத்திலிருந்து நீக்குவதற்கு அமெரிக்காவின் உதவியை நாடுவதைவிட இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்று சேர்ந்து பாதுகாப்பு தேடுவதே சிறந்ததென்றும் இதைப் பாகிஸ்தான் உணருமென்றும் ராஜாஜி கூறினர்.

---

பெர்லின், செப். 26

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசிலே "பெர்லினர் என் செம்பிள்" என்னும் பிரபல நாடகக்குழு லண்டனுக்குச் சென்று "லண்டன் தேசிய நாடகமன்றத்திலே" மூன்று வாரங்களாக நாடகங்கள் நடத்திவிட்டு, தாயகம் திரும்பியுள்ளனர். அவர்கள் லண்டனில் நான்கு நாடகங்கள் நடத்தினர்.

## அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமை

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க சேவை ஊழியர்களுக்கு அரசியல்உரிமை வழங்குவதென தேசிய அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்த உறுதியை தேசிய அரசாங்கத்தின் அடுத்த சிம்மாசனப் பிரசங்கத்தின்முன் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டதிகாரிகள் சங்கக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

அரசாங்க சேவை ஊழியரின் நலன்களில் நாம் வெகு அக்கறைகொண்டுள்ளோம். அவர்களது உரிமை, நிலைமை இவைபற்றியெல்லாம் அரசாங்கம் நன்கு ஆராய்ந்து பயனுள்ளவற்றைச் செய்யும்.

உரிமை விஷயத்தில் அரசாங்கத்தைப் பயமுறுத்தக்கூடாது. அரசாங்கம் நேர்மையான, நியாயமான கோரிக்கைகளை வழங்க என்றும் தயங்காது.

## கோரிக்கை

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. வே. சிவசம்பு தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

ஊர்காவற்றுறையில் தங்கும் வசதிக்கு விடுதிச்சாலைகள் இல்லை. 'வாடிவீடு' மாத்திரம் உண்டு. இவ்வாடிவீடு கட்டிட வசதியில்லாமலும், பழுதடைந்த நிலைமையிலும் இருக்கிறது. இதனை எடுத்துத் திருத்தியமைத்துத் திறமையான வாடிவீடாக இயங்குவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரை இச்சபை கேட்டுக் கொள்கிறது.

ஊர்காவற்றுறையில் அநேகர் வேலையின்றிக் கஷ்டப்படுகிருர்கள். நீர்வளம், நிலவளம் குன்றிய பட்டினப் பகுதியில் கமத்தொழில்செய்யவசதியில்லை. ஆகவே இங்கு ஒரு நெசவு ஆலையை நிறுவி மக்களின் கஷ்டத்தைப் போக்க வேண்டுமெனவும் அரசினரைக் கேட்டுகொள்ளும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதன் தெய்வீகமாவதே வாழ்க்கையின் இலட்சியம். நமது பலவீனத்தாலோ, குறைகளாலோ அந்த இலட்சியத்தைக் குறைத்துவிடக்கூடாது. என்னிடமுள்ள குறை குற்றங்களை நானறிவேன். இவற்றை நீக்க எனக்கு உதவி புரியும்படியே தினசரி மௌனமாக நான் அந்த உண்மைப்பொருளிடம் பிரார்த்தனை செய்துவருகிறேன். —மகாத்மா


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 11 உ (27-9-65)


## ஜனத்தொகைப் பெருக்கமும் உணவும்

"இலங்கையின் ஜனத்தொகைப் பெருக்கத்துடன் ஒப்பிடுகையில் உணவு நிலைமை மிக மோசமாக உள்ளது'' என்று உணவு விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா கருத்தரங்கமொன்றில் கவலையுடன் தெரிவித்திருக்கிறார்.

எங்கள் நாட்டின் ஜனத்தொகை ஒரு கோடி பத்து லட்சத்துக்குமதிகமாகும். ஒரு சதுரமைல் விஸ்தீரண நிலப்பரப்பில் 400 மக்கள் வசிக்கிறார்கள். இந்தியா, பாகிஸ்தானில் ஒரு சதுரமைல் நிலத்தில் 308 பேர்தான் வசிக்கின்றனர். உலகில் ஜனங்கள் நெருக்கமாக வாழும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. தென்கிழக்காசியாவிலேயே இலங்கையில்தான் ஜனப்பெருக்கம் அதிகம். எனவே பெருகிவரும் ஜனத்தொகைக்கு உணவுதேடுவது நமது முக்கியமான பிரச்னை என்று உணவு மந்திரி கூறுகிறார்.

பத்து வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட உள்நாட்டில் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறதென்பது உண்மையே. உணவு இறக்குமதியும் அதிகரித்திருக்கிறது. ஆனால் ஜனத்தொகையும் பெருகியிருக்கிறது. பெருகிவரும் ஜனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியும் அதிகரிக்கப்படாவிட்டால் நாட்டில் பசியும் பட்டினியும் பஞ்சமும்தான் தலைவிரித்தாடும். ஒருகாலத்தில் ஆசியாவின் நெற்களஞ்சியமாக விளங்கிய இலங்கைக்கு அந்தநிலை ஏற்படக்கூடாது.

இலங்கையில் இயற்கைவளத்துக்குக் குறைவில்லை. ஆள்பலத்துக்கும் குறைவில்லை. ஆனால்இவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டோம். முக்கியமான உணவுப் பிரச்னையை ஒதுக்கி வைத்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு வேறுபல பிரச்னைகளைக் கிளப்பி அதன்மூலம் சமூக வேற்றுமைகளுக்கும் வித்திட்டு நாட்டின் முன்னேற்றத்தைத் தடை செய்தோம். இப்பொழுதாவது உண்மை நிலையை உணர்ந்துகொண்டு எல்லோரும் ஒற்றுமையாகச் செயலாற்றத் தொடங்கினால் நாட்டை வறுமைப் பிணியிலிருந்து காப்பாற்றலாம். ஜனத்தொகைப் பெருக்கத்துக்கேற்ப துரிதமான முறையில் உணவு உற்பத்திக்கு வழி காணவேண்டும்.

நவீன, விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு விவசாயத்துறையை அபிவிருத்தி செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். ஜப்பான் மட்டுமல்ல சமீபத்தில் விடுதலையடைந்த சில ஆசிய, ஆபிரிக்க நாடுகள் கூட நவீன முறையைக் கடைப்பிடித்து உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் ஒரளவு முன்னேற்றம் கண்டிருக்கின்றன.

உணவு மந்திரியே தெரிவித்திருப்பது போல தீவிரமான உணவு உற்பத்தித் திட்டம் தயாரிக்கப்படவேண்டும். அவசியமானல் வெளிநாட்டு நிபுணர்களை அழைத்தும் ஒரு சபையை நிறுவி அதன் ஆலோசனைப்படி விவசாயத்திட்டம் தயாரித்து அதைச் சரியான முறையில் செயல்படுத்தவேண்டும். வெளிநாட்டு உதவிகளையும் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உபயோகப்படுத்தவேண்டும். வரண்ட பிரதேசங்களுக்கு பாசன வசதி செய்யவும் திட்டம் வகுக்கப்படவேண்டும். அரசியல் காரணங்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு உணவு உற்பத்தித் திட்டங்களுக்கு எதிர்க்கட்சிகளும் யோசனை கூறி அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவேண்டும். இனியும் காலம் கடத்துவது நாட்டிற்கு நிச்சயம் நன்மை தராது.

### ஐ. நா. என்ன செய்யும்?

யுத்தநிறுத்தம், யுத்தத்துக்கு மீண்டும் ஆயத்தம் செய்யும் ஓர் இடைக்கால ஓய்வாக இருக்கக்கூடாதென்று நாம் இப்பத்திகளில் சென்றவாரம் தெரிவித்திருந்தோம். இந்திய-பாகிஸ்தான் எல்லைகளில் நடைபெறும் சம்பவங்கள் பற்றியும் ஐ. நா. வில் இரு நாடுகளும் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றியும் கவனிக்கையில் நாம் தெரிவித்த அச்சம் தவறல்ல என்பது தெளிவு.

யுத்தத்தை நிறுத்திய தும் இரு பகுதித் துருப்புக்களும் பழையநிலைக்கு வாபஸ்பெறப் பட்டிருக்கவேண்டும். யுத்தநிறுத்தத்தையும் படைவிலக்கலையும் உடனடியாக அமுல்நடத்துவதற்கும் மேற்பார்வைசெய்வதற்கும் ஐ. நா. பாதுகாப்புச்சபை உடனடியாகவே தகுந்த ஏற்பாடு செய்திருக்கவேண்டும். பதினைறு தினங்கள் கடும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இருபகுதிப்படைகளும் யுத்தத்தை திடீரென நிறுத்திவிட்டு பகையை மறந்து அந்தந்த நிலைகளிலேயே, எதிரும் புதிருமாக ஆயுதங்களை சும்மா வைத்திருக்கவேண்டுமென எதிர்பார்க்க முடியுமா? யுத்தம் நிறுத்தப்பட்டதும் இருபகுதிப்படைகளையும் பின்வாங்கச் செய்து இராணுவ சூன்யப் பிரதேசம் ஏற்படுத்தப்பட்ட யுத்த முனைகளில் கூட அத்துமீறிப் பிரவேசிக்கும் சம்பவங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் நிகழ்வது சர்வசாதாரணம்.

இந்திய— பாகிஸ்தான் யுத்தநிறுத்தம் சரியான முறையில் செயல்படவில்லை. இனியும் பாதுகாப்புச்சபையும் தலைமைக் காரியதரிசியும் இவ் விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லையெனில் யுத்தத்தீ முன்னைவிட பெருமளவில் சேதம் ஏற்படுத்தக்கூடும். இவ்வித நிலைஏற்பட்டால் ஐ. நா.வின் பெயருக்கு இழுக்கு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

தனது யுத்தநிறுத்தத் தீர்மானத்தை சரியான முறையில் செயல்படுத் [illegible] ஐ. நா. [illegible] யப்போகிறது?

# பொருளாதார நிலையாறினுல் தமிழர்பிரச்னை தீரும்

## சோஷலிஸ ஆட்சியை பார்லிமெண்ட் மூலம் அமைக்க முடியாது

### திரு. சண்முகதாசன் விளக்கம்

யாழ்ப்பாணம், திங்.

"தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் ஒரு முற்போக்கு அரசாங்கம் உருவாக்கப்பட்டு, சிங்களவர்-தமிழர் என்ற வேற்றுமை காட்டப்படாது சோஷலிஸப் பொருளாதார அடிப்படையில் சிங்களவர்தமிழர் எல்லோருக்குமே வேலைகொடுக்கக்கூடிய ஒரு நிலைமை இந்நாட்டில் ஏற்படும் வரைக்கும் தமிழ்பேசும் மக்களுடைய பிரச்னை தீர்க்கப்படாத ஒரு பிரச்னையாகவே இருந்துகொண்டிருக்கும்'' என்று இலங்கை கம்யூனிஸ்ட்(சீன சார்பு)கட்சித் தலைவர் திரு. நா. சண்முகதாசன் நமது நிருபருக்கு அளித்த விசேஷ பேட்டியின்போது தெரிவித்தார்.

நமது நிருபர் கேட்ட கேள்விகளுக்கு அவர்மேலும் கூறியதாவது:

#### பொருளாதாரப் பிரச்னையேயாகும்

எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் சிறுபான்மைமக்களுடைய பிரச்னைகளை அடிப்படையில் ஒரு பொருளாதாரப் பிரச்னையாகவே கருதுகிறோம். இலங்கையில் சிங்களவர்-தமிழர் மத்தியில் இன்றைக்கு அதிகரித்துள்ள வேலையில்லாத் திண்டாட்டம் இன்றைய இனப்பிரச்னைக்கு முக்கிய காரணமாகும். இன்றிருக்கக்கூடிய சின்னச் சின்ன வேலைகளுக்கே தமிழர்-சிங்களவர் மத்தியில் பலத்த போட்டியைக் காணக்கூடியதாக இருக்கிறது.

சிங்களத்தை அரசகரும மொழியாக்கியதன் மூலம் சிங்களவர்களுக்குக் கூடுதலான அளவு வேலைவாய்ப்பை எடுத்துக்கொடுக்கலாமென சிங்களத் தலைவர்கள் எண்ணுகின்றனர். தமிழுக்கும் சமத்துவம் எடுத்துக்கொடுப்பதால் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு எடுத்துவிடலாமெனத் தமிழ்த் தலைவர்கள் நம்புகின்றனர். ஆனல் இந்தப் பிரச்னை இன்று நிலவும் ஏகாதிபத்திய-முதலாளித்துவ பொருளாதார அடிப்படையில் தீர்க்கமுடியாது என்பதே எமது கருத்து.

#### கங்கையைத் திருப்பவேண்டும்

தமிழ்பேசும் மக்களுடைய சகல பிரச்னைகளும் தீரவேண்டுமானல் முதலில் ஒரு முற்போக்கு அரசாங்கம் உருவாக்கப்படவேண்டும். அந்த அரசாங்கத்தின் மூலம் வரண்ட பாலைவனமாகக் காட்சியளிக்கும் வடபகுதியை வளமாக்குவதற்கு மகாவலிகங்கையை வடக்கே திருப்பவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்கள் தங்கள் பகுதியில் வேலைதேடிக்கொள்ளவாய்ப்புகள் ஏற்படும். இந்த நிலைமை உருவாகக்கூடிய காலகட்டத்தில் பிரதேச சுயாட்சிக்குக்கீழ் தமிழ்மக்கள் தங்களுடைய பிரதேசத்திலேயே, தங்கள் மொழியிலேயே சகல கருமங்களையும் செய்யக்கூடிய உரிமை கிடைக்கும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ்தான் தமிழருடைய பிரச்னை தீருமென்பது நமது நம்பிக்கை.

#### புரட்சி வழியிலேயே உருவாகலாம்

புரட்சிமூலம் அரசாங்கம் அமைப்பது பற்றி நமது நிருபர் அவரிடம் கேட்டபோது அவர் சொன்னதாவது:

வருங்காலத்தில் தொழிலாளர்களுடைய தலைமையின்கீழ் ஒரு முற்போக்கு அரசாங்கம் உருவாக்கப்படுமானல் அது ஒரு புரட்சிகர வழியில்தான் உருவாகலாம். முற்போக்குச் சக்திகள் வலுவடைந்துவரக்கூடிய ஒரு காலகட்டத்தில், அவர்கள் சமாதான வழியில் பாராளுமன்றத்தின் மூலமாக அரசாங்கத்தைக் கைப்பற்ற பிற்போக்குச் சக்திகள் ஒருபொழுதும் இடம் கொடுக்கமாட்டா. இதற்குச் சரித்திரமே சான்றுபகர்கிறது. உலகத்தில் ஒரு நாட்டிலாவது தொழிலாளி வர்க்கம் சமாதானமாக - பாராளுமன்றத்தின்மூலமாக ஆட்சிபீடம் ஏறியது கிடையாது. அண்மையில் கேரள ராஜ்யத்தில் நடந்த தேர்தல்சம்பவங்கள் இதற்கு அத்தாட்சி.

மக்களின் கூடியளவு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பார்லிமெண்டில் மிகப் பெரிய கட்சியாக வெற்றிபெற்றாலும் அவர்களுக்கு இடம் சிறைச்சாலை தான் என்பதற்கு கேரள சிறையிலிருக்கும் கம்யூனிஸ்டுகள் எடுத்துக்காட்டு. பிற்போக்குவாதிகள் எங்களுக்கு எதிராகப் பாவிக்கக்கூடிய பலாத்காரத்தை மக்களுடைய புரட்சிகரமான பலாத்காரத்தால் முறியடிக்காமல் பிற்போக்குச் சக்திகளை ஆட்சிபீடத்திலிருந்து ஒருபோதும் அகற்றமுடியாது. இப்படியான ஒன்றைத்தான் புரட்சி என்று சொல்கிறோம். இலங்கைத் தொழிலாளிவர்க்கமும் அதனுடைய நேச சக்திகளும் இப்புரட்சிப் போராட்டத்துக்குத் தயாராகவேண்டும்.

#### பார்லிமெண்டில் நம்பிக்கையில்லை

"பார்லிமெண்டில் நம்பிக்கையில்லாவிட்டால் ஏன் சென்றமுறைத் தேர்தலில் போட்டியிட்டீர்கள்?'' என்ற கேள்விக்கு திரு. சண்முகதாசன் கூறியதாவது:

பார்லிமெண்டுக்கு சென்று ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற நோக்கம் எமக்குச் சிறிதளவும் கிடையாது. ஆனல் எமது கொள்கையை அங்கே எடுத்துவிளக்குவதற்கு அதை ஒரு பிரசார மேடையாகப் பாவிக்கலாம் என்ற எண்ணத்துடன்தான் சென்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டேன். பொது மக்களிடம் சென்று நான் [illegible] கேட்டபோதே எமக்கு பார்லிமெண்ட்டில் நம்பிக்கையில்லை என்பதைதெரிவித்திருந்தேனே!''

மலைநாட்டு மக்களுடைய பிரச்னைகள் குறித்துக்கேட்டபோது அவர் குறிப்பிட்டதாவது:-

"மலையக மக்களுடைய பிரச்னை, இலங்கையில் இருக்கக்கூடிய இன்னெரு சிறுபான்மைப் பிரச்னை. அதுவும் அடிப்படையில் பொருளாதாரப் பிரச்னையே இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் பொருளாதார அடிப்படையில் இப்பிரச்னையைத்தீர்க்க முடியாது. இந்திய-இலங்கை ஆகிய இரு அரசாங்கங்களும் ஒற்றுமையாக இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதே வரவேற்கக்கூடியது. பலாத்காரம்பாவிக்கப்படாமல் விரும்பியவர்களை இந்தியாவுக்கு அனுப்பி. இங்கு இருக்க விரும்புபவர்களை இங்கேயே இருக்க வைத்தால் அதுநல்லதொரு விஷயமாகும்

இந்திய-பாக். சண்டையில் சீனவின் தலையீடு குறித்துக் கேட்டபோது அவர் சொன்னதாவது:-

#### யுத்தத்தில் சீன தலையிடவில்லை

இந்திய-பாக். யுத்தம் சீனவின் தலையீட்டினல்தான் உண்டானதென்று கூறுவது சுத்தப்பொய்ப் பிரச்சாரம். இந்தப் பிரச்னைக்கு வழிவைத்தவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள்தான் இப்போது இந்த யுத்தத்தை தீமூட்டிவைத்தவர்கள்அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள். பாகிஸ்தான் அமெரிக்காவின் சொல்லைக்கேட்காமல் ஒரு சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் காரணமாக சீனவுடன் நட்புக் கொண்டிருப்பதனல் பாகிஸ்தானுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டுமென்ற நோக்கத்துடனேயே அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவுக்கு பாகிஸ்தானை ஆக்கிரமிக்கும்படிதூண்டியது. அது பலிக்காமல்போனது வேறு ஒரு சமாச்சாரம்.

முழுத்தென் கிழக்காசியாவையும் தங்களுடைய பொருளாதார ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று பகற்கனவு கண்டு கொண்டிருக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமிட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

### பாரதி விழா

வட்டுக்கோட்டை, திங்.

வட்டுப்பிளவத்தை அ. மி. பாடசாலைக்கருகாமையிலிருக்கும் வீரபத்திரகோவில் வீதியில் பாரதிவிழா இன்று மாலை கொண்டாடப்படவிருக்கின்றது. இங்குள்ள சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் விழாவுக்கு திரு. கி. தாமோதரம்பிள்ளை தலைமைதாங்குவார். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம், ஆசிரியர் வ. பொன்னம்பலம் உட்பட வேறு பலரும் பேசுவர்.

ஃ ஃ ஃ

#### மாவிட்டபுரத்தில்

மாவிட்டபுரம், ஞாயிறு மாலை பாரதி சனசமூக நிலையத்தின் ஆதரவில் பாரதிவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குகூட்டுறவுப் பரிசோதகர் திரு. கி. மு. நாகலிங்கம் தலைமை வகித்தார். அவர் தமது உரையில் 'பாரததேசத்தின் அடிமைத் தளையை அறுத்தெறிந்து சுதந்திர வாழ்க்கைக்கு வித்திட்ட புரட்சிகவி' எனக் குறிப்பிட்டார். பாரதியின் தொண்டுகள் பற்றி திருவாளர்கள் அ. செல்வராஜா, சி. செல்லத்துரை, மு. முத்துலிங்கம், ச. சரவணமுத்து, ஏ. வைரமுத்து ஆகியோர் பேசினர். மலாயா செல்லும் திரு. கர்சிப்பிள்ளை குடும்பத்தினருக்கு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. திரு காசிப்பிள்ளை நன்றி கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய - பாக். போர் நிறுத்தம் மீறப்பட்டது

## பாதுகாப்புச்சபைக்கு யுதாண்ட் அறிக்கை

### ஐ. நா. மகாசபைக்கு காஷ்மீர் பிரச்னை கொண்டுசெல்லப்படும் என பூட்டோ தகவல்

நியுயோர்க், செப். 26

போர் நிறுத்த விதிகளை பாகிஸ்தான் மீறியதாக இந்தியாவும் இந்தியா மீறியதாகப் பாகிஸ்தானும் ஐ. நா. தலைமைக் காரியதரிசியிடம் புகார் செய்துள்ளன. காஷ்மீரில் சென்ற வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் துருப்புக்கள் போர்நிறுத்த விதிகளை மீறி நடந்துள்ளதாகவும் ஜம்மு சியால்கோட் பகுதியில் இரு தரப்பு துருப்புக்களுக்கிடையிலும் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதாகவும் தலைமைக் காரியதரிசி யுதாண்ட், பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இந்தியா, பாகிஸ்தான் ஆட்சேபம்

ஐ. நா. விலுள்ள நிரந்தரப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி ஐ. நா. தலைமைக் காரியதரிசியைச் சந்தித்து இந்திய—பாகிஸ்தான் யுத்த அரங்குகள் பலவற்றில் பாகிஸ்தான் போர் நிறுத்த விதிகளை மீறி ஆத்திரமூட்டும் முறையில் நடந்துள்ளதாகத் தெரிவித்ததுடன் அதன் விபரங்களையும் சமர்ப்பித்திருக்கிறார். போநிறுத்த விதிகளை பாகிஸ்தான் முழுமையாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இப்பொழுதுள்ள நிலைகளிலிருந்து தனது துருப்புக்கள் முன்புறமாக நடமாடுவதை அது நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் இல்லையேல் போர்நிறுத்தத் தீர்மானம் பாதிக்கப்படக்கூடுமென்றும் இந்தியப் பிரதிநிதி தெரிவித்திருக்கிறார். போர்நிறுத்த விதிகளை இந்தியா மீறத்தொடங்கியுள்ளதாகவும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இந்தியத் துருப்புக்கள் ஈடுபட்டுள்ளதாகவும் ஐ. நா. விலுள்ள பாகிஸ்தான் நிரந்தரப் பிரதிநிதி தலைமைக் காரியதரிசியைச் சந்தித்து ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

### இந்தியா விளக்கம் கோருகிறது

யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து இரு பகுதியினரின் ஆயுதம்தாங்கிய துருப்புக்களும் ஆகஸ்ட் மாதம் 5-ந் திகதிக்கு முன்னிருந்த நிலைக்கு விலகிச் சென்றுவிட வேண்டுமென்ற பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை செயல்படுத்துவதற்கான திட்டங்கள், நடைமுறைகள் பற்றி ஐ. நா. தலைமைக் காரியதரிசியிடம் இந்தியா விளக்கம் கேட்டிருக்கிறது. காஷ்மீருக்குள் நுழைந்த ஊடுருவல்காரர்களையும் விலக்கிக்கொள்வதுதான் முக்கியமென்றும் ஆயுதந்தாங்கிய துருப்புக்களைப் போலவே ஊடுருவல்காரர்களையும் கணிக்கவேண்டுமென்றும் ஊடுருவல்காரர்கள் பற்றி பாகிஸ்தான் பொறுப்பு ஏற்கவில்லையென்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

### எட்டு நாடுகள் சம்மதம்

இந்தய—பாகிஸ்தான் யுத்தநிறுத்தத்தை அமுல் செய்வதற்கு ஆயிரம் மைல் நீளமுள்ள எல்லையில் மேற்பார்வை செய்வதற்காக ஐ. நா. பொலிஸ் படைக்கு இராணுவ வீரர்களைக் கொடுத்து உதவ எட்டு நாடுகள் முன்வந்துள்ளன. பிரேஸில், கனடா, எதியோப்பியா, நைஜீரியா, ஆஜர்ன்டைனா, நெதர்லன்ட்ஸ், அயர்லாந்து முதலிய நாடுகளே சம்மதம் தெரிவித்துள்ளன. நூறு பேராகுதல் தேவையென யுதாண்ட் தெரிவித்திருந்தார். இந்நாடுகள் 70 வீரர்களை அனுப்பும். இதேசமயம் யுத்தநிறுத்த மேற்பார்வைப் பொலிஸ் படையில் ஆபிரிக்க நாடுகளையும் லத்தீன் அமெரிக்க நாடுகளையும் சேர்ந்தவர்கள்தான் இடம்பெறவேண்டுமென ஐ. நா. தலைமைக் காரியதரிசியிடம் பாகிஸ்தான் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

### 3 மாதத்திற்குள் தீர்வு இல்லையெனில்...

காஷ்மீர் பிரச்னைக்கு மூன்று மாதத்திற்குள் ஐ. நா. ஒரு தீர்வுகாணாவிட்டால் ஐ. நா. ஸ்தாபனத்தைவிட்டு வெளியேறுவதைத் தவிர பாகிஸ்தானுக்கு வேறு வழியில்லை என்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனாப் பூட்டோ இங்கு ஒரு பேட்டியில் தெரிவித்தார். காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் பாதுகாப்புச்சபை அசைந்துகொடுக்காவிட்டால் இப்பிரச்னையை ஐ. நா. மகாசபைக்குக் கொண்டு செல்லப்போவதாக ஜனாப் பூட்டோ கூறினார். ஐ. நா. விலிருந்து பாகிஸ்தான் விலகினால் 'சியாட்டோ', 'சென்டோ' போன்ற ராணுவ கூட்டுஸ்தாபனங்களிலிருந்தும் பாகிஸ்தான் வெளியேறிவிடுமா என்று கேட்டபோது இரண்டுக்கும் சம்பந்தமில்லையென்று பூட்டோ கூறினார். ஐ. நா. விலிருந்து விலகியதும் போட்டி ஸ்தாபனமொன்றை அமைப்பதில் பாகிஸ்தான் முன்னிற்குமா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் அதுபற்றிச் சொல்வதற்கு இது உரியதருணமல்ல என்றார். யுத்தநிறுத்தம் சம்பந்தமாக பாதுகாப்புச்சபை நிறைவேற்றிய தீர்மானத்தை நீக்கி புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு பாகிஸ்தான் முயற்சிசெய்துவருவதாகவும் இதில் பயன்கிடைக்காவிடில் இப்பிரச்னையை ஐ. நா. மகாசபைக்குக் கொண்டுசெல்ல பாகிஸ்தான் யோசிப்பதாகவும் அதிலும் தனது நோக்கத்துக்கு வெற்றிகிடைக்காவிடில் ஐ. நா. ஸ்தாபனத்தை விட்டு அது உடனடியாக வெளியேறிவிடுமென்றும் ஐ. நா. பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

### கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் சம்பவம்

கிழக்குப் பாகிஸ்தான் எல்லையில் அகர்தலா விமானநிலையத்துக்குச் சமீபத்தில் பகல்பூர்பகுதியில் பாகிஸ்தான் துருப்புக்கள் இந்திய எல்லைக்காவல் பொலிசார் மீது தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் 1500 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

### அயூப்கான் நிராகரிப்பு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலுள்ள தகராறுக்குச் சமரசத்தீர்வு காண்பதற்கு இந்தியப் பிரதமரும் பாகிஸ்தான் அதிபரும் சோவியத் யூனியனில் சந்தித்துப் பேசலாமென்று சோவியத் பிரதமர் இருவருக்கும் தெரிவித்திருந்த யோசனையை பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் நிராகரித்துவிட்டார். ''இப்போதுள்ள நிலையில் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசுவதால் எவ்வித பயனும் ஏற்படமாட்டாது' என்று சோவியத் பிரதமருக்கு எழுதியுள்ள பதிலில் அயூப்கான் தெரிவித்துள்ளார். காஷ்மீர் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண்பதற்கு பாதுகாப்புச் சபையில் சோவியத் ரஷ்யா உதவிபுரியலாமென்றும் அயூப்கான் தெரிவித்துள்ளார்.

### ஜனநாயகமும் சர்வாதிகாரமும்

இந்திய ஜனாதிபதி நேற்றிரவு நாட்டு மக்களுக்கு வானொலியில் நிகழ்த்திய ஓர் உரையில், இந்திய—பாகிஸ்தான் தகராறு [illegible] பிரச்னை என்றும் ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் இடையில் தோன்றி

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏடனில் மந்திரிசபை பதவிநீக்கம்

### ஆட்சிப்பொறுப்பை பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஏற்றார்

லண்டன், செப். 26

ஏடனில் தேசிய மந்திரிசபை கலைக்கப்பட்டு ஆட்சி நிர்வாகப் பொறுப்பை அங்குள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஏற்றுக்கொண்டுள்ளார். அங்கு மாலையிலிருந்து காலைவரையிலான ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏடன் தேசிய சபைத் துருப்புக்களுக்கும் பிரிட்டிஷ் பாதுகாப்புப் படைத் துருப்புக்களுக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் சிலர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

ஏடன் தேசியவாதிகளுக்கு ஏடன் இடைக்கால மந்திரிசபை பகிரங்கமாக ஆதரவளித்ததாகப் பிரிட்டன் குற்றம் சாட்டியுள்ளது. ஒழுங்குமுறையுள்ள அரசியல் சாஸனமொன்றை ஏடனுக்கு அளிப்பதே பிரிட்டனின் நோக்கமென்று பிரிட்டிஷ் ஹைகமிஷனர் தெரிவித்தார்.

பிரிட்டனின் கைப்பாவையாக இயங்க, தேசிய மந்திரிசபை மறுத்ததே மந்திரிசபை கலைக்கப்பட்டதற்குக் காரணமென்று ஏடன் முதன்மந்திரி தெரிவித்தார்.

### டிட்டோ கருத்து

லண்டன், செப். 26

இந்திய—பாகிஸ்தான் தகராறில் சீனா தலையிட்டதனால் நிலைமைமோசமடைந்ததாக யுகோஸ்லவேக்கியா அதிபர் டிட்டோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

டெலிவிஷன் பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தகராறுகளை பேச்சுவார்த்தைகள்மூலம் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் அவர் தெரித்தார்.

### நீவின் - கோஸிஜின் அறிக்கை

மாஸ்கோ, செப். 26

பர்மாவுக்கு விஜயம் செய்யுமாறு பர்மிய அதிபர் விடுத்த அழைப்பை சோவியத் ஜனாதிபதி பிரஸ்னேவும் பிரதமர் கொஸிஜினும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஐ. நா. வில் நவசீனாவை ஓர் அங்கத்துவ நாடாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சோவியத் பிரதமரும் பர்மியஅதிபர் ஜெனரல் நீவினும் தங்கள் பேச்சுவார்த்தைகளின் பின் விடுத்த கூட்டறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

வியட்னாம் பிரச்னை 1954-ம் வருட ஜெனிவா ஒப்பந்த அடிப்படையில் தீர்க்கப்படவேண்டுமென்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துன்ளனர்.

இந்திய-பாகிஸ்தான் தகராறு நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கப்படவேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

### நேரடி விமானசேவை

கராச்சி, செப். 26

பீகிங்கிற்கும் காரச்சிக்குமிடையில் நேரடி விமானசேவை புதன்கிழமையிலிருந்து ஆரம்பமாகுமென அறிவிக்கப்படுகிறது.

### 200,000 பிரதிநிதிகள் ஆற்றிய பணி

பெர்லின், செப், 26

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலே உள்ளூர்ஆட்சி மன்றங்களில் பிரதிநிதித்துவம் வகிக்கும் சுமார் 200,000 பிரதிநிதிகள் தாங்கள் கடந்த நான்கு ஆண்டுகளாகச் செய்த சேவைகளைப்பற்றிய விபரங்களை இப்போது மக்களிடம் சமர்ப்பித்துவருகின்றனர். அக்டோபர் 10-ம் திகதி உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு நடைபெறும் தேர்தலில் போட்டியிடும் புதிய பிரதிநிதிகளும் மக்களிடம் தங்களை அறிமுகப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

### உலகில் முதலாவது நீர்மூழ்கி

ரோஸ்டொக், செப். 26

1851ல் வில்ஹெல்ம் பவரால் அமைக்கப்பட்ட முதலாவது ஜெர்மன் நீர்மூழ்கிக்கப்பல் ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் ரோஸ்டொக் கப்பல் தளத்தில் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. அது தரைமார்க்கமாக போர்ஸ்டம் நகருக்கு அனுப்பப்பட்டு, அங்கு இராணுவ நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்படும். வில்ஹெல்ம் பவர்தான் ஜெர்மனியில் நீர்மூழ்கியைக் கண்டுபிடித்தவர்.

### 2-வது சைவமகாநாடு

#### இன்றைய நிகழ்ச்சிகள்

பி. ப. 5 மணி: பஜனை பாதயாத்திரை. இடம்: கச்சியப்பர் அரங்கு. தலைவர்: சைவப்பெரியார் புலவர் த. குமாரசாமிப்பிள்ளை. கடவுள்வாழ்த்து: தனங்கிளப்பு குருசாமி வித்தியாசாலை மாணவிகள். வரவேற்புரை: திரு. ஆ. பொன்னையா. மங்கலவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தல்: திரு. செ. சிவஞானம். தலைமையுரை: தலைவர். விரிவுரைகள்: சித்தாந்தசிரோன்மணி மு. மயில்வாகனம், வித்துவான் மு. சபாரத்தினம், திருவாளர்கள் இ. சுப்பிரமணியம், இ. வைத்திலிங்கம், சி. உ. சோமசேகரம், பண்டிதை தவமலர் சின்னத்துரை, சைவப்பிரசாரகர் க. முருகேசு.

#### ஐயந்தெளிதல் நிகழ்ச்சி

தலைவர்: புலவர் வித்துவான்: மு. கணபதிப்பிள்ளை, கருத்துரையாளர்: புலவர் தமிழ்மாறன், கலைநிகழ்ச்சி: தலைவர்: க. தம்பிப்பிள்ளை, சிறப்புரை: த. தியாகராசா, இன்னிசை விருந்து: கைதடி செவிடர்குருடர் பாடசாலை மாணவிகள், நடனம்: மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை, நாடகம்: தென்மராட்சி இளந்தமிழர் மன்றம், பரிசில் வழங்கல்: திரு. சோ. சடாட்சரம், பட்டமளித்தல்: உயர்திரு. த. குமாரசாமிப்பிள்ளையால் திருவாளர்கள் நா. பொன்னம்பலத்துக்கும், சி. சரவணமுத்துவுக்கும் ஆலயப் பிரசாரகர் என்ற பட்டம் வழங்கல்.

# "ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் அமையவேண்டும்"

## வட்டுக்கோட்டை எம். பி. பேச்சு

சுழிபுரம், ஞாயிறு

"எமது காலத்தில் சமூக ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயமாக வாழ நாம் திட சங்கர்ப்பம் செய்யவேண்டும்" என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தையொட்டி நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். பொருளாதார முன்னேற்றத்தினாலோ அல்லது வேறு எக்காரியத்தின் மூலமோ சாதியை ஒழிக்கமுடியாதென்றும் எமது மனமாற்றத்தின் மூலமே இக்காரியத்தைச் செய்யலாம் என்றும் அவர் சொன்னார். வலி.மேற்கு காரியாதிகாரி திரு. ந. மாணிககநடராசா, திரு. எஸ். நடராசா, திரு. எஸ். கந்தசாமி, திரு. கே. செல்வராசா, திரு. எஸ். இராசதுரை உட்பட மற்றும் பலர் பேசினர்.

ஃ ஃ ஃ

பருத்தித்துறை, ஞாயிறு

"சமூகஏற்றத்தாழ்வுஒழிப்புக்கு மக்கள் மனமாற்றமே அவசியமானது. அதற்கு திட்டமிட்ட பிரச்சாரம் மிகவும் இன்றியமையாதது. இந்த இருபதாம் நூற்றுண்டின் பல்வேறுதுறை முன்னேற்றத்துடன் ஒப்பிடும்போது தமிழ்பேசும மக்கள் மத்தியில் இன்னமும் சாதி பேதம் இருப்பது நிச்சயமாகத்தலைகுனிந்து வெட்கப்படவேண்டியஒன்ருகும்."

இவ்வாறு வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. ஏ. சி. விசுவநாதன் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெற்றசமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வார விசேட பகிரங்கக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. பி. நவரத்தினராசா பேசுகையில் கூறியதாவது:

உயர்வு தாழ்வு பேசுவது அர்த்தமற்றது. இந்தஉயர்வு தாழ்வுப் பிரச்னையால் தமிழர் சமுதாயம் பிரதேசவாரியாகவும், சாதிவாரியாகவும் பல கூருக்கப்பட்டு பலவீனமடைந்து வருகின்றது என்பதையாவது சிந்தித்து நிச்சயம் மனமாற்றம் அடையவேண்டியது சமுதாய சேவையாகும்."

### சாதனை தேவை

பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. த. சிதம்பரப்பிள்ளை, கிராம சேவகர் திரு. செ. ஜெகநாதன், சிரேஷ்ட உதவி ஆசிரியர் க. பசுபதி ஆகியோரும் பேசினர்.

பெற்ருேரும் மாணவரும் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் பாடசாலை மாணவர்கள் சமரசங்கீதங்கள் பாடினர்.

ஃ

### துன்னலையில்

துன்னலை மெதடிஸ்த பாடசாலையிலும் தலைமை ஆசிரியர் திரு. வி. இரத்தினம் தலைமையில் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புவாரப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

ஆசிரியர் எம். எஸ்.முருகப்பா வள்ளுவர், ஔவை, பாரதி ஆகிய பெரும் புலவர்கள் வாக்குகளை ஆதாரங்காட்டி உயர்வு தாழ்வு அகற்றப்படவேண்டிய அவசியம் பற்றி வற்புறுத்திஞர்.

ஃ ஃ ஃ

### புலோலியில்

சமூகஏற்றத்தாழ்வுஒழிப்பு வாரத்தையொட்டி விசேஷ பகிரங்கக் கூட்டம் ஒன்று புலோலிதெற்கு புற்றளைவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கிராம முன்னேற்றச் சங்கங்களின் மேற்பார்வை அதிகாரி திரு. கே. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் இந்த வாரத்தின் நோக்கம், ஏற்றத்தாழ்வு ஒழிப்பின் அவசியம் ஆகியவைபற்றி கிராம சேவகர் திரு, செ. ஜெகநாதன், ஆசிரியர் திரு.வை. க. இராசசேகரம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

---

# பட்டினசபையின் அனுதாபம்

சங்கானை, ஞாயிறு

வடபகுதி உள்ளூர் ஆட்சி விசாரணையாளர் திரு. வி. சி. சண்முகத்தின்மறைவுகுறித்து சங்கானை பட்டினசபை மாதாந்தக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம்ஒன்று ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு திரு. கே. அம்பலவாணர் தலைமை வகித்தார்.

ஏழைப் பொதுமக்களுக்கு சேவைசெய்யும் சி. டபிள்யு. ஈ. கடைகளை மூடுவதையிட்டு இச்சபை அதன் அதிருப்தியைத்தெரிவிப்பதோடுஅக் கடைகளை மூடவேண்டாமென்றும் ஏதேனும் குறைகள் இருந்தால் அவைகளைத் திருத்தவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமெனவும் இச்சபை சம்பந்தமான இலாகாவைக் கேட்டுக்கொள்கின்றதென்ற தீர்மானமும் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சாகித்தியமண்டல உறுப்பினராகத் தெரிவு

நல்லூர் திங்கள்

இலங்கை சாகித்திய மண்டலத்தின் தமிழ் உறுப்பினர்களில் ஒருவராக இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஆ. சதாசிவம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் கடந்தமூன்று ஆண்டுகளாக சாகித்திய மண்டல உறுப்பினராக இருந்துவந்துள்ளார்.

# சிறுவர் வாரம்

யாழ்ப்பாணம், சனி

அடுத்தமாதம் முதல்திகதியிலிருந்து சிறுவர்வாரத்தை விரிவான முறையில் இலங்கை பூராவும் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# "சூரியனும் சந்திரனும் உள்ளவரை பாரதி வாழ்வார்"

## தமிழ் மன்றக்கூட்டத்தில் சிங்களக்கவிஞர்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

"பெற்ற தாயும், பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே" என்று பாரதி பாடினர். பாரதியார் பெற்ற தாயைப் போல நாட்டுக்கும் முதலிடத்தைக் கொடுத்தார்; போற்றினர்; பாராட்டினர். ஆயிரமாயிரம் ஆண்டுகள் குலவி வாழ்ந்த நாடு- அந்தப் பாரம்பரிய நாடு என்று போற்றினர். அந்த நாடு விடுதலை பெற்று வீறு நடைபோடவேண்டும் என்று பாடினர். அந்த அளவிற்கு நாட்டுப்பற்று விழுமியிருந்தது அவரிடம்."

இவ்வாறு சிங்கள மகாகவி பி. பி. அல்விஸ் பெரேரா கடந்தவாரம் நாரயன்பிட்டியிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தமிழ் மன்றச் சார்பில் நடந்த பாரதி விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் துணைத் தலைவர் திரு. இ. வயிரவிப்பிள்ளை விழாவிற்குத் தலைமைவகித்தார். பெருந்திரளான சிங்கள, தமிழ் ஊழியர்கள், பெண்கள் உட்பட விழாவில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. தமிழ் முறைப்படி குத்துவிளக்கேற்றி வைக்கப்பட்டிருந்தது. விழாவுக்கு வந்த பேச்சாளர்களையும் ஏனையோரையும் வரவேற்று மன்றச் செயலாளர் திரு. நா. சோமகாந்தன் விழா ஆரம்பமாகுமுன் பேசினர். மகாகவி அல்விஸ் பெரேராவின் சிங்களப் பேச்சை திரு. பிரேம்ஜி தமிழில் மொழிபெயர்த்தார்.

மகாகவி அல்விஸ் பெரேரா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"பாரதியின் சுதந்திர வேட்கையை மேலும் தூண்டியது வங்கத்து அறிஞர்கள் ரவீந்திரநாத் தாகூர், சட்டர்ஜி போன்ருேரின் சுதந்திர கீதங்களும் கருத்துக்களும் என்ருல் மிகையாகாது. உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை என்ருர்! இச்சகத்துளோரெல்லாம் எதிர்த்து நின்றபோதிலும் அச்சமில்லை என்ருர். காக்கையும், குருவியும், குழந்தையும், குழந்தைகள் தங்க மேனியும், இயற்கையும், எழில் வனப்பும் அவர் கருத்தில் ஊன்றிக் கவிதையாக உருப்பெற்றன. மனித சமுதாயம் உள்ளவரை பாரதி வாழ்வார்; சூரியனும் சந்திரனும் உள்ளவரை பாரதி வாழ்வார்; அவர் விழாவிலே கலந்துகொண்டதில் சிங்களக் கவிஞன் என்ற முறையிலே நான் பெருமைப்படுகிறேன்.

(6-ம் பக்கம் பார்க்க)

# இந்திய - பாக். போர் நிறுத்தம் . . . . .

(3- ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள போராட்டம் என்றும் கூறினர். மதத்துக்கும் மதச் சார்பற்ற தன்மைக்கும் தோன்றியுள்ள சோதனையென்றும் அவர் சொன்னர். "இந்தியா பல மொழி, பல இன, பலமத மக்கள் வாழும் நாடு" என்று குறிப்பிட்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்திய பாகிஸ்தான் சண்டையின் போது இந்தியாவிலுள்ள ஒன்றரைக்கோடி முஸ்லிம் மக்கள் காட்டிய ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் சுட்டிக்காட்டினர். பாகிஸ்தான், சீன ஆகிய அயல் நாடுகளுடன் நட்புடன் வாழவே இந்தியாவிரும்புகிறது என்று கூறிய டாக்டர் ராதாகிருஷ்ணன் பாகிஸ்தானை அழிக்கும் நோக்கம் இந்தியாவுக்குக் கிடையவே; கிடையாது என்ருர்.

## மேனன் திரும்புகிருர்

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு இரண்டு நாள் விஜயம் செய்திருந்த இந்திய முன்னுள் பாதுகாப்பு மந்திரி திரு வி. கே. கிருஷ்ணமேனன், ஜனதிபதி நாஸரையும் குடியரசுப் பிரதமர் அலிசாப்ரியையும் சந்தித்து இந்திய எல்லையில் சீன, பாகிஸ்தான் நிலைமை பற்றியும் இந்தியாவின் நிலைபற்றியும் விளக்கிக் கூறிவிட்டு, கெய்ரோவிலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்டார்.


இதோ •
அறிமுகப்படுத்துகிறோம்
இன்றைய லான்ட்மாஸ்டர்
Landmaster

நன்கு பரீட்சிக்கப்பட்டு, உலகப்பிரசித்திபெற்ற புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட JLO 5 ஹோஸ் பவர் மண்ணெண்ணை இயக்க என்ஜினுடன்

JLO என்ஜினில் இப்பொழுது எண்ணெயில் அமுக்கப்பட்ட வாயுத துப்புரவாக்கி (ஒயில் பாத் எயர் கிலீனர்) அமைக்கப்பட்டுள்ளது. அசுத்தங்களை வடிகட்டித் துப்புரவாக்குவதன் மூலம் ஆயுள் காலப் பாதுகாப்பை அளிக்கின்றது. ஆகக் குறைந்த இயக்கச் செலவில் ஆயுள் காலப் பாவனையையும், நிகரற்ற சேவையையும் நிச்சயப்படுத்துங்கள்.




• இப்பொழுது அமைப்புப் பெறும் ஹெட்லைட் (வெளிச்சம்) இரவிலும் இயக்குவதை நிச்சயப்படுத்துகின்றது.

ஆயிரம் லான்ட் மாஸ்டர் பாவனையாளர்கள் சொல்வது பொய் யாகாது!
பயிரிடுங்கள், அதிகமாக, துரிதமாக, சிக்கனமாக.
நன்ருக.
இன்றைய லான்ட் மாஸ்டர்
உதவிகொண்டு.
Landmaster

ஏக விநியோகஸ்தர்கள்:—
BROWNS GROUP B G ESTABLISHED
பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டேட்
தேவநம்பியதிஸ் வீதி, கொழும்பு 10.






சைலால்

முகப்பரு, சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பத்து, வெட்டுக்காயம், வேனல் கட்டி, தீப்பட்டபுண், சேத்துப்புண், பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில் கறைபிடிக்காது

தயாரிப்பவர்கள் "ராதா புறடக்ஸ்"

விநியோகஸ்தர்:—
எஸ். சுப்பிரமணியம் அன் கோ
53, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

சினிமாத் தியேட்டருக்கு

1. மனேஜர்: சினிமாத் தியேட்டர் 2 வருட அனுபவம் பிணைப்பணம். 3000/-.

2. டிக்கட் விற்பனையாளர்கள்:- பிணைப்பணம் 1500/- கல்வி அறிவு உடையவர்கள் விரும்பத்தக்கது.

2 டிக்கட்சேகரிப்பவர்கள்: பிணைப்பணம் 1000/- கல்வி அறிவு உடையவர்கள் விரும்பத்தக்கது.

3 ஒப்பரேற்றர்கள்:- தியேட்டர் அனுபவம் பிணைப்பணம் 1000/- (காலை 9 மணி தொடக்கம் பி.ப 2 மணிவரை) செப்ரம்பர் மாதம் 29-ம் திகதி புதன்கிழமை நேரில் தொடர்பு கொள்ளவும்.

விலாசம்:-
173, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மைக்கேல் ரேடியோ சேவிஸ்
(சிங்களப் பாடசாலைக்கு எதிரில்) 873

### மல்லாகம் கிராமசபை

கேள்வி விளம்பரம்

1. ஒப்பந்தவேலை:- மல்லாகம் ஐயனர் கோவிலடி ரேட் திருத்தி அமைத்தல்.
2, (1) கேள்விப் பத்திரம் கொடுத்தல்:- 27-9-65 பி. ப. 3 மணி வரை.
(2) கேள்விப்பத்திரம் ஏற்றல்:- 28-9-65 பி.ப. 3 மணி வரை.
3. (1) தகுதி:- ரூபா 15,000/- க்குக் குறையாத பதிவுபெற்ற தகுதியான ஒப்பந்தகாரர்.
(2) கேள்விப் பத்திரப் பணம் ரூபா 50/-
(3) பத்திரக் கட்டுப் பணம் ரூபா 5/-
4. விபரம் அறிவித்தல்:-
(1) வடபகுதி உள்ளூர் ஆட்சி உப அதிபர்.
(2) கிராமசபை, மல்லாகம்.

வை. இராசதுங்கம்,
அக்கிராசனர்,
கி. ச., மல்லாகம்.



## விளையாட்டுப் பகுதி

# சம்பத்தரிசியார் கல்லூரிக்கு இரு ஆட்டங்களிலும் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் சென்ற வெள்ளிக்கிழமை சம்பத்தரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சம்புத்தரிசியார் கல்லூரி இரு போட்டிகளிலும் வெற்றிபெற்றது.

இரு கல்லூரிகளின் 'பி' பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சம்பத்தரிசியார் கல்லூரி 8—0 கோல்களால் மானிப்பாய் இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது.

'ஏ' பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சம்பத்தரிசியார் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியை 3—0 கோல்களால் வெற்றிபெற்றது மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னணி வீரர்கள் மிகவும் வேகமாக விளையாடிய போதிலும் கோல்கள் போடும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடியாமல் விட்டுவிட்டனர். இரு கல்லூரிகளின் கோல்காப்பு வீரர்களும் ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றனர். இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் விளையாட்டே மிகவும் நன்ருக அமைந்திருந்தது. இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

### யங்லயன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் 'யங்லயன்ஸ்' விளையாட்டுக் கழகத்திற்கும், பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் 'யங்லயன்ஸ்' விளையாட்டுக் கழகம் 7—1 கோல்களால் பரமேஸ்வராக் கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. தேவபாலன் மத்தியஸ்தம் வகித்தார்.

### சென். ஜோசப் வெற்றி

யாழ்ப்பாணம் சென், ஜோசப் விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ், மத்திய கல்லூரிக்குமிடையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஜோசப் விளையாட்டுக் கழகம் 3—0 கோல்களால் யாழ். மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது.

### முகமாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேச்சர் தேவை

1. வயது:- 25—40.
2. பிணை:- ரொக்கம் ரூபா 1000/-
3. சம்பளம்:- ரூபா 75/-
4. கல்வித்தராதரம்:- கனிஷ்ட தராதரப் பத்திரமும், கூட்டுறவுக் கலாசாலையில் பயிற்றப்பட்டவரும்.
5. விற்பனைக்கு ஆள்இல்லை. மனேச்சரே விற்பனையும் செய்யவேண்டும்.

இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் (1) கிராமசேவகர், (2) சமாதான நீதவான் (J. P.). 5-10-65 -க்கு முன் பதிவுத் தபால்மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்,

விண்ணப்பம் செய்பவர்கள் 7-10-65 காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு தவருது சமுகம் கொடுக்க வேண்டும்.


இ கனகசபை,
தலைவர்,
ப. நோ. கூ. சங்கம்,
முகமாலை,
எழுதுமட்டுவாள் P. O.
876

### 4-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்;
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



# கைகொடுத்த தெய்வம்

REGAL—JAFFNA
NOW SHOWING!
Glenn Ford
IN
LOVE IS A BALL
(Cinemascope - color)

## வரி விளம்பரம்

### கல்வி

நல்லூர் கலைக்கல்லூரியில் இரு பாலாருக்கும் திறமையான முறையில் தட்டச்சு ஆங்கிலத்திலும் தமிழிலும் நான்கு மாதத்தில் கற்பிக்கப்படும். மற்றும் பாடங்கள் சிங்களம், இரசாயனம், வர்த்தகம், பொருளாதாரம், கணக்குப்பதிவியல், ஆங்கிலம், சுருக்கெழுத்து இருமொழிகளிலும் கற்பிக்கப்படும். அதிபர், 262, ஆடியபாத ரேட், நல்லூர். 1053

### விற்பனைக்கு

சரித்திரபாட வழிகாட்டி வினு—விடை G. C. E. வகுப்பு. 1965 புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதிய சரித்திரபாட வழிகாட்டி வினு—விடை. விலை: 3-50. ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1057

### தேவை

கொழும்பில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்ற காவற்காரர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 35—45 வயதுக்குட்பட்டவர்களாகவும் குறைந்தது 5 அடி 6 அங்குல உயரமுடையவராகவும் இருக்க வேண்டும். தெரிந்தெடுக்கப்படுவோர் பகலிலோ, இரவிலோ 8 மணித்தியால வேலை செய்யக் கோரப்படுவர். ஆரம்பத்தில் நாளொன்றுக்கு 4 ரூபாவும், நிரந்தரமாகிய பின்னர் மாதமொன்றுக்கு 110 ரூபாவும் வேதனம் வழங்கப்படும். பிணைப்பணம் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்கவும்:- விளம்பர இல. 1073, மே/பா- ஈழநாடு, யாழ்ப்பாணம். 1073




### கொழும்பு

திங்கள் 27-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, 7-15 பாட்டு — பரம்ஜோதி அம்மா ராஜமாணிக்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எங்கள் விருப்பம், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 நேயர்விருப்பம், 10-15 எங்கள்விருப்பம்.

### கீரிமலையில் நவராத்திரிவிழா

கீரிமலை, ஞாயிறு
கீரிமலை சிவன்கோவில் துர்க்காதேவி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது. சனிக்கிழமை மகாயாகபூசை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு இரவும் துர்க்காதேவி அம்பாளுக்கு விசேஷமான முறையில் சந்தனக்காப்பு சாத்தப்பட்டு விசேஷ ஆராதனைகள் நடத்தப்படுகிறன. உபந்நியாசங்கள், இசைநிகழ்ச்சிகள் என்பனவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறேம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்.
சுந்தரம் பிறதர்ஸ்
கோவில் அபிஷேகப்பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

போன்-7213
பெட்டா பார்மஸி
ஆங்கில மருந்துகளுக்கு
23 [illegible] வீதி, கொழும்பு. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய ஆர்வத்தை மாணவரிடம் வளர்க்குக

## உதவி வித்தியாதிபதி ஆசிரியர்களுக்கு புத்திமதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இந்நாட்டின் உணவு அபிவிருத்தியை முன்னிட்டு கிராமப் புறத்தவர்களை விவசாயத்தில் கூடுதலாக ஈடுபடுத்த விவசாயத்தைக் கட்டாயபாடமாக்க வித்தியா பகுதியினர் முடிவு செய்துள்ளனர், மாணவர்களை விவசாயத்தில் ஈடுபடுத்தக்கூடியதாக ஆசிரியர்களின் மனப்பான்மை முக்கியமாக மாற வேண்டும். அவ்விதம் மன மாற்றம் ஏற்பட்டால்தான் இத்திட்டம் பயனளிக்கக் கூடியதாயிருக்கும்'' என்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பரிசளிப்புவிழாவில் பிரதமவிருந்தினராககலந்து கொண்ட உதவி வித்தியாதிபதி திரு. வி. துரைசிங்கம் பேசும்போது கூறினார்.

மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழா திரு. துரைசிங்கம் மேலும் கூறியதாவது:

மாணவர்கள் பாடசாலைத் தோட்டங்களில் ஈடுபடுவதைவிட வீட்டுத்தோட்டங்களை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு ஊக்கமளிக்க ஆசிரியர்கள்கவனிக்கவேண்டும்.

ஆங்கிலம் மூலம் எமது சுயபாஷை கல்வியை அபிவிருத்திசெய்ய வேண்டிய தேவை இருக்கிறது. விஞ்ஞானத்துறையிலோ அல்லது தொழில் துறையிலோ ஆங்கிலத்தை சரியாகப்படித்தால் தான் சுயபாஷைமூலம் கல்வியைத் திருப்திகரமாகப் போதிக்கக்கூடியதாயிருக்கும்.

கல்லூரி அதிபர் திரு சபாலிங்கம் அறிக்கையில் கூறியதாவது: உயர்தரப்பரீட்சையை நடத்த ஒரு தனிப்பட்ட ஆலோசனைச் சபையை ஏற்படுத்துதல் நன்று என நான் அபிப்பிராயப்படுகிறேன். பரீட்சையை நடத்தும்பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். சோதனை நடந்த நாலு மாத காலத்திற்குள் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும்

திருமதி துரைசிங்கம் பரிசில்களை வழங்கினார்

# சாதிபேதத்தை ஒழிக்க புரட்சிகர இளைஞர் தேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''நமது சமுதாயத்தில் புற்றுநோய்போலப் புரையோடிப் போயிருக்கும் சாதி என்ற வியாதியை ஒழிப்பதில் பாடசாலைகள்தான் முன்னிற்கவேண்டும். பாடசாலைகளில் கல்விபயிலும் குழந்தைகளும், வாலிபர்களும், இளைஞர்களும் தம்முடன் படிக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் சாதிவித்தியாசமின்றி சகலவற்றிலும் சமத்துவமாக நடந்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் நமது சமுதாயத்தைப் பிடித்திருக்கும் சாதி என்றசாபக் கேட்டை ஒழிக்க முடியும்''

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற சமூக ஏற்றத் தாழ்வு ஒழிப்புப் பொதுக்கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''இந்த இருபதாம் நூற்றுண்டின் கடைசிப்பகுதியில் கூட சமூகத்தில் 'சாதி' என்ற கொடுமை தாண்டவமாடுவதை நினைக்கும்போது வேதனையாகவும் வெட்கமாகவும்தானிருக்கிறது. ஆனாலும், அந்தச்சாதியை ஒழித்துக் கட்டுவதற்கு கட்சிப் பாகுபாடின்றி எல்லாரும் இணைந்திருப்பதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. நம் மத்தியிலிருந்து சாதியை ஒழிப்பதற்குப் புரட்சிகரமான இளைஞர்கள் தோன்றி புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

அமெரிக்காவிலே ஒரு கறுப்புப் பெண்மணி ஒரு ஹோட்டலிலே வெள்ளையர்களால் படுமோசமாகத் தாக்கப்பட்டார் என்பதைப் பத்திரிகைகளில் நாம் படிக்கும்போது உணர்ச்சி வசப்பட்டு வெள்ளையர்க்ள் மீது ஆத்திரப்படுகிறோம். ஆனால் வட்டுக்கோட்டையிலே ஒரு சைவப் பாடசாலையில் ஐந்து வயதுப்பையன் தாழ்த்தப்பட்டவன் என்பதற்காக ஆசிரியர் ஒருவரால் படுமோசமாகத் தண்டிக்கப்பட்டார் என்பதைத்தெரிந்தும் எதுவித உணர்ச்சியற்றும் இருக்கிறோம். நான் மேற்குறிப்பிட்ட சம்பவம் உண்மையாகவே என்தெகுதியில் இடம்பெற்றது.

கோயில்களில், பாடசாலைகளில், தேநீர் கடைகளில் சட்டத்தை உபயோகித்து சாதிப்பாகுபாட்டை ஒழிக்க வேண்டும்.

கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை பேசுகையில், சாதி என்ற பேரே வடமொழியிலிருந்து வந்ததென்றும் அப்படியான சொல் தமிழ்மொழியில் இல்லையென்றும் சொன்னார்.

திரு. எம். வைரமுத்து பேசுகையில், சைவசமயத்தில் வேதம், ஆகமங்களில் சாதியை வற்புறுத்தியிருப்பதாக ''பெரிய சாதி''க்காரர்கள் சிலர் சொல்லியிருக்கிறார்களென்றும், அப்படி ஏதும் வேதம் ஆகமங்களில் கிடையாதென்றும் சொன்னார்.

திரு. நெவில் ஜெயவீரா பேசுகையில், தமிழ்பேசும் மக்கள் முன்னேறவேண்டுமானால் அவர்கள் மத்தியிலிருக்கும் சாதிப்பாகுபாடு ஒழியவேண்டுமென்று சொன்னார்.

யாழ். மேயர் எஸ். [illegible] உட்பட வேறு பலரும் பேசினர்.

## லொறி விபத்தில் வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

இனம் கண்டுகொள்ள முடியாத வயோதிபர் ஒருவர் நேற்றுப்பகல் பத்துமணியளவில் ஆனைப்பந்தியடியில் லொறியில் மோதுண்டு மரணத்துக்குள்ளான சம்பவம் நடைபெற்றது.

லொறியைச் செலுத்திவந்த சாரதியான அரியாலையைச் சேர்ந்தவேலுப்பிள்ளை வீரசிங்கம் என்பவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு.ரி. ஜே ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். சாரதி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. த. யோகநாதனின் வேண்டுகோளின் பெயரில் லொறிச் சாரதி வீரசிங்கம் ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். மாஜிஸ்டிரேட் சாரதியை அடுத்த மாதம் 11:ம் தேதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

மரணத்துக்குள்ளான வயோதிபரின் சடலம் தற்போது யாழ்ப்பாணம் பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் இவர் குடுமி வைத்திருக்கிறரெனவும் யாழ்ப்பாணம் பொலிஸார் இவரைப் பற்றி தகவல் தெரிவித்துள்ளனர்.


Estd: 1929 **S. R. S.** போன்: 296

**ஜவுளி மாளிகை**

தீபாவளி பண்டிகைக்காக

எல்லாவிதமான

ஜவுளித் தினிசுகளும்

ஏராளமாக வரவழைத்திருக்கிறோம்

உங்கள் தேவைகளுக்கு

முன்கூட்டியே தெரிவு செய்யுங்கள்!

எமது சொந்த தறிகளில் தயார் செய்த

கைத்தறி சேலைகளும்,

பரமாஸ் வேட்டி சால்வைகளும்

விற்பனைக்குத் தயாராக இருக்கிறது.

**எஸ். ஆர். செல்லத்துரை**

216, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சாகித்தியதின விழா

நயினாதீவு, சனி

சாகித்தியதின விழா சென்ற வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நயினாதீவு கிராமசபை மண்டபத்தில் நயினாதீவு கிராமசபைத் தலைவர் திரு. சி. க. தம்பையா தலைமையில் நடைபெற்றது,

அவ்வமயம் பாடசாலை ஆசிரியர்களும், மகாவித்தியாலயம் உட்பட மூன்று பாடசாலை மாணவ மாணவிகளும் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்தனர்.

இறுதியில் பேச்சுப் போட்டி, நடனம், பாட்டு முதலிய நிகழ்ச்சிகளில்பங்கு பற்றிய மாணவ மாணவிகளுக்கு கிராமசபைத் தலைவரால் பரிசில்கள் வழங்கப்பட்டன

## கல்விக் காரியாலய திறப்பு விழா

வவனியா, சனி

வவனியாவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கல்விக்காரியாலயத்தை வித்தியாதி இன்று காலை 10-30க்குத் திறந்துவைத்தார்.

## தொழில் பயிற்சி நிலையங்கள்

பம்பலப்பிட்டி, சனி

தொழில் பயிற்சி நிலையங்களை அதிகரிக்க தொழில் விடமைப்பு மந்திரி ஜனாப், எம். எச். முகமது தீர்மானித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகிய இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரப்பிக்கப்பட விருப்பதாக மந்திரி தெரிவித்துள்ளார்.

## சூரியனும் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதி யானையின் அடிபட்டு ஏற்பட்ட நோயினால் உயிர் நீத்தார். விவேகத்தின் தெய்வம் கணபதி-பிள்ளையார். கணபதி யானை முகத்தவர். பாரதி நீடு வாழ்ந்தால் தனக்கு அவமானம் ஏற்பட்டுவிடும் என்று யானையின் மூலம் கணபதி, பாரதிக்கு முடிவு கட்டினார் போலும்! எனினும் பாரதியை யாடும் மறந்துவிட முடியாது. அவர் அமரகவி-உலகக் கவி.''

இதையடுத்து செல்வி அன்னலட்சுமி இராசையா பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''சுதந்திர தாகம் மிகுந்து தவித்தவர் பாரதி. அவர் பாடல்கள் சுதந்திர வீறு கொண்ட பாடல்கள். தூங்கிக்கிடந்த மக்களைத் தட்டி எழிப்பினார். சமுதாயச் சீர்கேடுகளைச் சாடினார்.

சமுதாயத்தில் சாதிப்பிளவும் சமயக் கொடுமையும் பெண்கள் இழிநிலையும் நீங்க வேண்டும் என்று முதலில் குரல்கொடுத்த கவிஞன் பாரதி. ஏழை என்றும் அடிமையென்றும் எவனுமில்லை உலகினில் என்று அடித்துரைத்தார்.''

மன்றத் துணைத்தலைவர் திரு. ஆ. தேவராசன் மன்றம் தொடக்கப்பட்ட நோக்கத்தினை விளக்கியும் சிங்கள-தமிழ் இலக்கிய சமரசம் ஏற்பட இன்று புதுச் சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும் கூறி அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்.

## இந்திய . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சக்திநிலையம் சமாதான காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தவேண்டுமென்றும் வேறு எதற்கும் பயன் படுத்தக்கூடாதென்றும் இந்தியாவை கனடா எச்சரித்திருப்பதாகவும் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

## சிவமணிக்கு வவனியா அஞ்சலி

வவனியா, ஞாயிறு

''சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு தன் வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்த காலஞ்சென்ற சைவப் பெரியார் சேர் கந்தையா வைத்திய நாதனின் சேவைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியுதொன்றும்''.

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற காலஞ்சென்ற சேர் கந்தையா வைத்திய நாதனின் இரங்கற் கூட்டத்திற்குத் தலைமைவகித்த வவுனியா நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையா தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

சேர் வைத்தியநாதனின் நினைவாக ஞாபக மண்டபம் ஒன்று வவுனியாவில் கட்டப்படவேண்டுமென்றும் அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

வண. ம. குணரத்தின தேரோ பேசுகையில், இலங்கையில் பௌத்தர்களும், சைவர்களும் சகோதரர்களென்றும் இந்துசமயத்தின் வளர்ச்சிக்காக உழைத்த பெரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் பௌத்த சமயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாரென்றும் சொன்னார்.

திருவாளர்கள்: பி. வின்சென்ட், பி. எஸ். அப்துல்லா, த. நல்லதம்பி உட்பட வேறுபலரும் பேசினர்.

## பொருளாதார . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சில செயல்கள்தான் இந்திய-பாக். யுத்தத்துக்கு முக்கிய காரணம்.

''தேசியஅரசாங்கம் தமிழ் மக்களுடைய பிரச்னைகளைத் தீர்க்குமா?'' என்று நமது நிருபர் கேட்டதற்கு திரு. சண்முகதாசன் சொன்னதாவது:-

### பெயரளவில் தேசிய அரசாங்கம்

பெயரளவில் மட்டும் தேசிய அரசாங்கம் என்றிருப்பதால் தமிழ் மக்களுடைய பிரச்னைகளை அவர்கள் தீர்த்துவைப்பார்கள் என்று நாம் ஒரு பொழுதும் எதிர்பார்க்கமுடியாது. தமிழ் மக்களுக்கு ஏதாவது உரிமை கொடுத்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் சும்மா இருக்கமாட்டார்கள், யு. என். பி. யைக் குழிதோண்டிப் புதைத்துவிடுவார்கள். சுதந்திரக்கட்சியினர் செய்து வரும் வகுப்புவாதப் பிரச்சாரத்தைவிட ஜே. ஆர். கோஷ்டியினர் மோசமான வகுப்புவாதப் பிரச்சாரத்தை இரகசியமாகச் செய்து வருகின்றனர், ஆகையால் தேசிய அரசாங்கம் ஒரு பொழுதும் தமிழர் பிரச்னையைத் தீர்க்கமாட்டாது.

சாதிப்பிரச்னை பற்றி அவர் கூறியதாவது:-

''சாதியை மேடைகளில் பிரசங்கங்கள் வைப்பதால் ஒழிந்துவிடமுடியாது. மேடைகளில் சாதியை ஒழிக்க கூக்குரலிடும் தமிழ்த்தலைவர்கள் தமது வீடுகளில் அதனை நடைமுறைக்குக்கொண்டு வந்தால் சாதி என்ற வியாதி நம்மைவிட்டு ஓரளவாவது ஓடிவிடும்.

அமெரிக்காவில் நீக்ரோ மக்கள் எப்படிபெரியதொரு போராட்டம் நடாத்தினர்களோ அதே மாதிரி நமது மத்தியில் தாழ்த்தப்பட்டிருக்கும் மக்கள் உரிமைப் போராட்டம் நடாத்தினால் தான் சாதிப்பிரச்னை ஒழிக்கப்படும்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org